# தொழிற் முன்னேற்ற பாதை

# தோல் பொருள் உற்பத்தியாளர்

## (லெதர் கூட்ஸ் மேக்கர்)



## ஐடிஐ-யில் பயிற்றுவிக்கப்படும் திறன்கள்:

- பல்வேறு வகையான கைக்கருவிகள் மற்றும் இயந்திரங்களை இயக்கும் திறன்
- பல்வேறு தோல் பொருள்கள் செய்ய தோல்களை குறைபாடுகள் இல்லாமல் தேவையான பண்புகளுடன் தேர்ந்து எடுத்தல்
- டிசைனிங் (மேன்யுவல் மற்றும் கணினி உதவியுடன்) மற்றும் பேட்டர்ன் தயாரிக்கும் திறன்
- மார்க்கிங், கிளிக்கிங், ஸ்கைவிங், போல்விங், அசெம்பிளிங் மற்றும் ஸ்டிச்சிங் திறன்
- பல்வேறு தோல் பொருட்கள் தயாரிக்கும் திறன்
- தேவைப்படும் மூலப்பொருட்களை கணக்கிடுதல் மற்றும் தயாரிக்க தேவைப்படும் மூலதனத்தை கணக்கிடுதல், சொந்த தொழில் தொடங்க தேவையான தன்னம்பிக்கை, திறம்பட பணிபுரிதல் மற்றும் நிர்வாகத்திறன்
- மேலும் தொழிற்பயிற்சிக்கு சம்பந்தமாக மேற்கொண்டு படிக்க தேவையான ஆர்வத்தை வளர்த்தல்

## தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறன்கள்:

- பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றி வேலை செய்யும் நடைமுறைகள், சுற்றுச்சூழல், பணியிட தூய்மை கடைபிடித்தல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டை பற்றி அறிந்து பணிபுரிதல்
- குறைபாடுகளை கண்டறிந்து லைன் சூப்பர்வைசர் வழிகாட்டுதல் பின்பற்றி வேலையை நடைமுறைப்படுத்துதல்
- பல்வேறு தோல் பொருட்கள் செய்யும் இயந்திரங்களை இயக்கும் திறன்
- இயந்திரங்களில் ஏற்படும் இயக்க பிழைகளுக்கான காரணத்தை கண்டறிந்து மெக்கானிக் மூலமாக பழுது நீக்கியபின் பணியினை தொடருதல்
- இயந்திரங்கள் மற்றும் கைக்கருவிகளை சூப்பர்வைசர் வழிக்காட்டுதல் படி இயக்கி பொருட்களின் தேவைக்கு ஏற்ப துல்லியத்தினை ஆய்வு செய்யும் திறன்





## ஐடிஐ முடித்தபின் வேலைவாய்ப்புகள்:

- பணிமனை உதவியாளராக அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பணி
- இராணுவத்தில் ஆர்டினைஸ் எக்யூப்மெண்ட் தொழிற்சாலையில் பணி (மத்திய அரசு)
- மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தில் அரசுப்பணி
- தனியார் நிறுவனங்களான டாடா, ஹெடு சைன் போன்றவற்றில் பணி
- சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்நிறுவனங்களில் பணி
- வெளிநாட்டு நிறுவனங்களில் வேலை



## ஐடிஐ முடித்தபின் என்னவாகலாம்:

### ஆரம்ப நிலை

பயிற்சி வேலையாள், தொழில் பழகுநர், ப்ரெஷ் வேலையாள், அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பணிமனை உதவியாளர்

### இடை நிலை

முழுதிறனுடைய வேலையாள், மேற்பார்வையாளர், லைன் சூப்பர்வைசர்

### மூத்த நிலை

இளநிலை உற்பத்தி மேலாளர், மேலாளர், வெளிநாட்டு நிறுவனங்களுக்கான கொள்முதல் ஏஜென்ட், வெளிநாட்டு நிறுவனங்களில் வேலை, சுய வேலைவாய்ப்பு, தொழில் முனைவோர், அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி அலுவலர்



## ஐடிஐ முடித்தபின் என்ன படிக்கலாம்:

- தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநராக சேர்ந்து தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் பெறுதல்
- மத்திய காலணி பயிற்சி நிலையம், Footwear design and development institute (FDDI), மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம், ஆகியவற்றில் உள்ள குறுகிய கால பயிற்சிகளில் சேர்ந்து படிக்கலாம்
- ஐடிஐ-க்களில் பயிற்றுநராக பணியில் சேருவதற்காக (Craft Instructor Training Scheme) பயிற்றுநர் பயிற்சி முடித்து சான்றிதழ் பெறலாம்


QUEST ALLIANCE

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

Industrial Training Institute